DR. H. V. HANDE : It is more than a year since the agreement was entered into and since then we have begun to receive power supply as a result of this project. Will the Hon. Minister tell us, what is the quantity of total power supply that we have received actually during the current year after the signing of the agreement?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பொதுவாக தண்ணீர் அதிகமுள்ள நேரங்களில் குறைந்தது 20 மெகாவாட் வரையில் பெரியாற்றில் எடுக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் ஒப்பந்தம் 29-ம் தேதி கையெழுத்து போட்டாலும் அதற்கு முன்பே 1958-லிருந்தே நாம் உற்பத்தி செய்து மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டு வருகிறோம். ஒப்பந்தம் முடிவதற்கு முன்பே அனுமதி கொடுத்து இருந்தார்கள். அதற்கு முன்னால் 1958-லிருந்து உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறோம். கையெழுத்து தாற்காலிகமாக 1970-ஆம் ஆண்டு முற்றுப்பெற்று இருக்கிறது. 99 ஆண்டு காலத்திற்கு இந்த ஒப்பந்தத்தின் மூலம் நமக்குப் பயன் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சேலம் அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் காவலில் வைக்கப் பட்டிருந்த மஞ்சுளா என்ற பெண்ணின் மரணம் குறித்து

MR. SPEAKER : The hon. Members, Thiru K. T. K. Thangamani, Thiru S. Algarswamy and Thiru N. Marudachalam have given notice of an adjournment motion under Rule 42 of the Assembly Rules to discuss the following matter of urgent public importance, namely—

'The death of 18 year old girl Manjula, daughter of a Bank employee, Thiru Sevi Gounder, in Salem on 2nd June 1971 after four days of detention under Police custody in Asthampatti Police station, Salem, under suspicious and questionable circumstances.'

The hon. Member Thiru Thangamani will explain as to how this comes under Rule 42.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக இன்று காலையில் கூட 25 தந்திகள் வந்து இருக்கின்றன. சேலத்தில் மக்கள் மத்தியில் ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டு இருக்கிறது. அங்கு ஒரு விசேஷம் நடந்ததாகவும் அந்த விசேஷத்தில் அந்த வீட்டில் பணியாற்றிக் கொண்டு இருந்த 18 வயது பெண் மஞ்சுளா என்பவள் ஏதோ சாமான் திருடி இருப்பார்

1971 ஜூன் 21] [திரு.கே. டி. கே. தங்கமணி]

என்று அவர்கள் சந்தேகப்பட்டு போலீசுக்கு அனுப்பி இருப்ப தாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இம்மாதிரியான விசேஷங் களில் பெரிய மனிதர்கள்தான் திருடுகிறார்கள் என்பதை நானே கூட நேரடியாகச் சில இடங்களில் பார்த்து இருக்கிறேன். ஏதோ தொழிலாளிதான் திருடி இருப்பார் என்று நாலு நாள் வரையில் போலீசில் வைத்திருந்து அந்தப் பெண் இறந்து இருக்கிறார்கள். அந்தப் பெண்ணின் தகப்பனார் ஒரு பாங்கி சிப்பந்தி. பாங்கி சிப்பந்திகள் சங்கத்தின் மூலம் மக்கள் மத்தியில் இதைக்கொண்டு வருவதற்குப் பெருமுயற்சி எடுக்கப்பட்டது. சமீபத்தில் நடந்த சம்பவம். இதற்காக அவர்கள் நேரடியாகப் போலீசின் மூலமாக நடவடிக்கை எடுக்க முயற்சி செய்தும் பலன் ஏற்படவில்லை என்ற காரணத்தால்தான் இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது மாதிரியாக சந்தேகப்படுகின்ற காலங்களில் ஏற்பட்ட சம்பவங்களைப்பற்றி விசாரணை செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதால்தான் இதை அரசுக்கு முன்னால் வைக்கிறேன். இது மாதிரியான சம்பவங்கள் இனி மேலாவது நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்களும் மற்ற உறுப்பினர் களும் தந்துள்ள இந்த ஒத்தி வைப்புப் பிரேரணை குறித்து எனக்கு வந்துள்ள தகவல்களை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். இந்தத் தகவல்களை அப்படியே நான் ஏற்றுக் கொண்டதாக அர்த்தம் இல்லை என்பதை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனக்கு வந்துள்ள தகவல்களை முதலில் இங்கே படிக்கின்றேன்.

சேலம் கனரா வங்கியில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றி வரும் சேவி கவுண்டர் என்பவரின் மூன்றாவது மகள் மஞ்சுளா என்ற 18 வயது நிரம்பிய பெண். மரணத்துக்கு முன் இரண்டு மாத காலமாக மஞ்சுளா என்ற அந்தப் பெண், அஸ்தம்பட்டி ருக்மணி ஆசிரமத்தின் உரிமையாளர் இரத்தின முதலியார் என்பவரின் வீட்டில் சாப்பாட்டோடு மாதம் இருபது ரூபாய்க்கு பணிப்பெண்ணாக வேலை செய்து வந்தாள். 1971-ம் ஆண்டு மே மாதம் 30-ம் தேதியன்று இரத்தின முதலியார் வீட்டில் நடந்த ஒரு திருமணவரவேற்புக்கு விருந்தாளியாக வந்திருந்த கௌரி சுப்பிரமணியம் என்பவருடைய எட்டு பவுன் மதிப்புள்ள தங்க நகை திருட்டுப் போனதைக் குறித்து இரத்தின முதலியார் தாக்கல் செய்த புகாரின் பேரில் அஸ்தம்பட்டி காவல் நிலையத்தினர் குற்ற எண். 411/71 இ.பி.கோ. 381 பிரிவின்படி ஒரு வழக்கைப் பதிவு செய்து புலன் விசாரணை தொடங்கினர். வழக்கை புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் மேற்படி மஞ்சுளாவை யும் ஏனைய ஆண் பணியாளர்களையும் விசாரணை செய்தார் என்று எனக்குத் தகவல் வந்துள்ளது. இது நடந்தது 30-ஆம் தேதி. பிறகு 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி அன்று வழக்கமாக

வந்து கூட்டிச் செல்லும் தன் தகப்பனார் இரவு வெகு நேரம் ஆகியும் வராததால், மஞ்சுளா அன்று இரவு தன் முதலாளி வீட்டில் தங்க நேரிட்டது. வழக்கம் போல் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் தேதி காலை எழுந்து தன் வேலைகளை மேற்கொண்டாள். அன்றைக்கு காலை 5-30 மணிக்கு அவ்வீட்டில் பணியாற்றி வந்த வேலை ஆள் மணி என்பவர் பூக்காரனை அழைத்து வருவதற்காகப் புறப்பட்டுச் செல்லும் தருணம், 100 அடி தூரத்திலிருந்த வீட்டுக் கிணற்றில் ஏதோ விழும் சத்தத்தை கேட்டார். உடனே கிணற்று நீரில் சென்று பார்த்த அவர் மஞ்சுளாவின் புடவை கிணற்று நீரில் மிதப்பதைக் கண்டார். அவர் எழுப்பிய குரலைக் கேட்டு ஓடி வந்த கோவிந்தன், மாணிக்கம், முருகன், மற்றும் சிலர் மஞ்சுளாவின் உடலைக் கிணற்றிலிருந்து வெளியேற்றினார்கள். அப்போது மஞ்சுளா பிரேதமாக ஆகிவிட்டதைக் கண்டார்கள் இரத்தின முதலியார் வீட்டில் வேலை பார்த்து வரும் ஒரு எழுத்தர் கொடுத்த புகாரின் பேரில் அஸ்தம்பட்டி காவல் நிலையத்தினர் மேற்படி சம்பவம் குறித்து (குற்ற எண். 419/71) அன்று காலை 6-15 மணிக்குப் பதிவு செய்து உடனே புலன் விசாரணை செய்தனர். அஸ்தம்பட்டி ஆய்வாளர் பிரேத விசாரணையின் போது மஞ்சுளாவின் பெற்றோர்களையும் அவருடைய நெருங்கிய உறவினர் களையும் விசாரித்தார்கள். அவர்கள் யாரும் மரணத்திற்கு எந்த விதமான சந்தேகத்தையும் வெளிப்படுத்தவில்லை. இரத்தின முதலியார் வீட்டில் நடந்த திருட்டு வழக்கில் தன்னையும் உட்படுத்தலாம் என்ற மனத் தளர்ச்சியினாலும் பய உணர்ச்சி யினாலும் தற்கொலை செய்து கொண்டு இருக்கவேண்டும் என்ற ஒருமித்த கருத்தைப் பஞ்சாயத்தார்கள் தெரிவித்தார்கள். இருப்பினும் பிரேதம் சேலம் மாவட்ட மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு டாக்டர் திருமதி சுந்தரம்மாள் என்பவரால் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. மேற்படி பரிசோதனையை நடத்திய டாக்டர், பிரேதத்தின் மேல் உட்காயமோ அல்லது வெளிக்காயமோ எதையும் காணவில்லை என்றும், மரணத்திற்கு நீரில் மூழ்கியதால் நேர்ந்த மூச்சுத் திணறலே காரணம் என்றும் கருத்தைத் தெரிவித்துள்ளார். இப்போது உள்ள குற்றச்சாட்டு பிரேத விசாரணை நடத்திய டாக்டர், இரத்தின முதலியாருக்குச் சொந்தக்காரர் என்பது. ஆனால் அவர் உண்மையில் ரெட்டியார் வகுப்பைச் சார்ந்தவர். ஆகவே டாக்டர், இரத்தின முதலியாருக்குச் சொந்தமானவர் என்பது உண்மைக்குப் புறம்பானது. மஞ்சுளாவின் தகப்பனார் சேலம் மாவட்ட வங்கி ஊழியர்களின் சங்கத்தில் ஒரு அங்கத்தினர். ஆகையால் மேற்படி சங்கம் இச்சம்பவத்தை அவர் சார்பில் எடுத்துக் கொண்டு அவதூறாக இந்தப் புகாரைத் தந்து இருப்பதாக எனக்குத் தகவல் அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் நான் தொடக்கத்தில் குறிப்பிட்டவாறு, அதை அப்படியே ஏற்றுக் கொண்டேன் என்று இல்லாமல் மீண்டும் இந்த சம்பவத்தைக் குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று தலைமை போலீஸ்

அதிகாரி ஐ.ஜி. அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். ஆகவே இது பற்றி ஒத்தி வைப்புப் பிரேரணை தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கி இருக்கிறார்கள். ஆகவே இதற்காகப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதுகின்றேன். மேலும் பேரவை விதி 50 (viii)-ன் படி, இது அரசின் அன்றாட அலுவலுக்கு உட்பட்டது என்பதால், இத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(3) அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் தேதி நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி பேரவையின் அலுவல் ஏற்கனவே அச்சிட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளபடி, நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(ஆ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 156 (3)-க்கு இணங்க 1 முதல் 25-A வரை எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்களை 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் நாள், புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள்ளும் இதர மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்களை 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் நாள் சனிக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள்ளும் சட்டப்பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று அறிவிக்கின்றேன்.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.